**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சாமுவேல்ராஜ் | **PW-13** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

**(எதிரி ஆஜர் )**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:-**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு சான்று ஆவணம் 53 கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றப்பட்ட ஆவணங்களை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி விஜயா என்பவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், பெரியார் பல்கலைக்கழகம் வழங்கிய B.Ed பட்டப்படிப்பு சான்று மேற்படி பல்கலைக்கழகம் வழங்கிய B.A. பட்டப்படிப்பு சான்றிதழ் ஆகும். மேற்படி சான்றுகள் அடங்கிய ஆவணங்கள் வரிசை **அ.சா.ஆ.**54. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் (4,6,7,8,9,11,14,21,22,25,26 மற்றும் 28) தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

சிபிசிஐடி காவல்துறை அலுவலகத்திற்கும் எங்கள் அலுவலகத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 பரலாங் இருக்கும். நான் மேற்படி தேதியில் சிபிசிஐடி அலுவலகத்திற்கு சென்று சாட்சியாக இருப்பதற்கு எனது உயரதிகாரிகள் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் இல்லை தொலைபேசி வாயிலாக தான் சொல்லப்பட்டது. நான் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் பணிபுரிந்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நிலையில் எனது உயர் அதிகாரி தொலைபேசி வாயிலாக எனக்கு உத்தரவு பிறப்பித்தார் என்று கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை

என்றால் சரியல்ல. நான் காலை 11 மணியளவில் சிபிசிஐடி அலுவலகம் சென்ற சமயத்தில் எனக்கு முன்பாக எதிரி அங்கு இருந்தாரா அல்லது பின்னிட்டு வந்தாரா என்றால் நான் சென்ற பின்னிட்டு தான் வந்தார். அவ்வாறு எவ்வளவு நேரம் கழித்து வந்ததாக சொல்கிறேன் என்றால் சுமார் கால் மணி நேரம் இருக்கும். எதிரி சிபிசிஐடி அலுவலகத்திற்கு வர இருக்கிறார் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் என்னை சாட்சியாக இருக்குமாறு போலீசார் அழைத்தார்கள் என்றால் சரிதான். சிபிசிஐடி அலுவலகத்தில் உள்ள வருகையாளர் பதிவேட்டில் நான் கையெழுத்திட்டேனா என்றால் நினைவில்லை. எனக்கு இந்தி மொழி தெரியாது என்றால் சரிதான். எதிரி இந்தியில் கொடுத்த வாக்குமூலம் விவரங்கள் எதுவும் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். ஆனந்த் லாட்ஜ் சி பி சி ஐ டி அலுவலகத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். போலீசார் மேற்படி எதிரி ஆனந்த் லாட்ஜில் இருந்து வந்தார் என்று காண்பிக்க லாட்ஜ் ஆவணங்களை எதையும் என் முன்பாக கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி ககுன் பிஹாரி சேனாபதி முன்பாக எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் போலீசார் எந்தவிதமான ஆவணங்களையும் கைப்பற்றவில்லை என்றும் போலீசார் காவல்நிலைத்தில் வைத்து அவர்கள் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் என்னிடம் கையெழுத்து போட சொன்னதின் அடிப்படையில் நான் மேற்படி ஆவணங்களில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள அனைத்து விவரங்களும் பொய்யானவை என்றால் சரியல்ல.

**<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**